# தமிழக அரசை கலைக்குமாறு கருணாநிதி கோரிக்கை

(சென்னை)
தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளதால் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அரசைக் கலைக்க வேண்டும் என தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி கூறி

[4-ம் பக்கம் பார்க்க]

ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 11 இதழ் 98
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 24 - 05 - 1993

## மாகாண சபைகளுக்கு பூரண அதிகாரம்?

(கொழும்பு)
அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் பிரகாரம் மாகாணசபைகளுக்குரித்தான அதிகாரங்கள் அனைத்தும் அவற்றுக்கு வழங்கப்படவேண்டுமென்று ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க சகல அமைச்சர்களுக்கும் உறுதியான பணிப்புரை வழங்கியுள்ளார்.

[4-ம் பக்கம் பார்க்க]

## சேபால ஆட்டிகல பாதுகாப்பு ஆலோசகர்

(கொழும்பு)
ஜெனரல் சேபால ஆட்டிகல தேசிய பந்தோபஸ்து ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏயார் சீவ் மார்ஷல் வால்டர் பெர்னாண்டோ நேற்று தெரிவித்தார்.

[4-ம் பக்கம் பார்க்க]

★ மாற்றத்தின் எதிரொலி:

# தமிழக ஆளுநர் இராஜினாமா!

# புதிதாக சென்னாரெட்டி நியமனம்

(சென்னை)
தமிழக ஆளுநர் திரு. பீஷ்மன் நாராயண்சிங் நேற்று தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார் என ஜனாதிபதி மாளிகை நேற்று இரவு அறிவித்தது.

தமிழகம் உட்பட 3 மாநிலங்களின் ஆளுநர்கள் வெவ்வேறு மாநிலங்களுக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்தே தமிழக ஆளுநர் திரு. பீஷ்மன் நாராயண்சிங் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

தமிழகத்தின் புதிய ஆளுநராக ராஜஸ்தான் மாநில ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி நியமிக்கப்பட்டுள்ளார். திரு. சத்திய நாராயண்ரெட்டி உத்தர பிரதேசத்திலிருந்து ஒரிஸாவுக்கு ஆளுநராகவும் உத்தர பிரதேசத்திற்கு முன்னாள் அமைச்சர் திரு. மோதி

[4-ம் பக்கம் பார்க்க]

## ஆளுநர் பீஷ்மருடன் 'ஜெ' அவசர சந்திப்பு

(சென்னை)
தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மாநில ஆளுநர் திரு. பீஷ்மன் நாராயண்சிங்கை நேற்றுக் காலை ஆளுநர் மாளிகையில் அவசரமாக சந்தித்து 40 நிமிட நேரம் பேசினார்.

தமிழக நிலவரம் குறித்து அவர் ஆளுநரிடம் எடுத்துக் கூறியதாக ஆளுநர் மாளிகையின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

இந்தச் சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் தமிழக முதல்வரின் வேண்டுகோளின் பேரிலேயே இந்தச் சந்திப்பு இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-சி)

மாகாணசபை விவகாரம்:

## அடுத்த நடவடிக்கை குறித்து எதிரணிகள் இன்று கூடுகின்றன

(கொழும்பு)
திருமதி ஸ்ரீமா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி மற்றும் ஜ. ஐ. தே. முன்னணி ஆகிய கட்சிகள் பெரும்பான்மை பெற்றுள்ள தெற்கு மற்றும் வடமேற்கு மாகாண சபைகளின் ஆளுநர்கள் ஐ. தே. கட்சியை சார்ந்தவர்களை முதலமைச்சர்களா

மிக முக்கியமான கூட்டம் ஒன்றை இன்று நடாத்தவுள்ளன.

மேற்படி கட்சிகள் இணைந்து

[4-ம் பக்கம் பார்க்க]

## தமிழர் வாக்கு கிடைக்கவில்லை காமினி கட்சி பெரும் கவலை

(கொழும்பு)
தமிழ் மக்களின் வாக்குகள் கிடைக்காததினால் தான் மத்திய மாகாணத்தில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தோல்வியை தழுவிக் கொண்டது என்று அதன் தலைவர் திரு. காமினி திசநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் கூறியதாவது:

நாங்கள் தோல்வி அடைவதற்கு இதுதான் காரணமாகும். கண்டி மாவட்டத்தில் 75,000 தமிழ் மக்களின்

[4-ம் பக்கம் பார்க்க]

## பிரேமா ஆட்கள் தொடர்ந்து நீக்கம்

(கொழும்பு)
காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவால் உயர்பதவியில் நியமிக்கப்பப்பட்டபலரை பதவியிலிருந்து அகற்றும் பணியில் ஜனாதிபதி விஜயதுங்க தொடர்ந்தும் தீவிரமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே ஏயர் லங்கா பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டு காலம் சென்ற ஜனாதிபதியின் மருமகன் ஜொகான் ஜெயக்கொடி பதவி நீக்கம் செய்யப்பட்டதும் இதன் தொடர்ச்சியாக பல கூட்டுத்தாபன சபைகளின் தலைவர்கள் தொடர்ச்சியாக நீக்கப்பட்டுவருவதும் பாதுகாப்பு உயர்தளபதிகள் பலர் ஓய்வு பெறுவதும் இதன் ஓர் அம்சம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க-சி)

பிரேமா கொலை:

## ஒன்பது தமிழர் தீவிர விசாரணையில்

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாஸாவை கொலை செய்தவரின் சகாக்கள் எனச் சந்தேகிக்கப்படும் பத்துப் பேரை விசேட விசாரணைக்குழு விசாரணை செய்து வருகிறது.

இக்கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட பத்துப் பேரில் ஒருவர் சிங்களவர், ஏனைய ஒன்பது பேரும் தமிழர்களாவார்கள். இவர்களில் சிலர் முன்னர் வடக்கிலிரு

[4-ம் பக்கம் பார்க்க]

## புலிகளின் சமாதான அழைப்பிற்கு அரசு தொடர்ந்து மௌனம்

(கொழும்பு)
ஜனாதிபதி திரு. விஜயதுங்கவுடன் நிபந்தனையின்றி சமாதானப் பேச்சுக்களை நடாத்த விடுதலைப் புலிகள் தயாராக விருப்பதாக விடுத்த அழைப்பிற்கு அரசு தரப்பில் தொடர்ந்தும் மௌனம் சாதிக்கப்பட்டுவருகிறது.

புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற விஜயதுங்க புலிகளுடன் பேச்சு நடாத்த தாம் தயாராயிருப்பதாகவும், புலிகளை பேச்சுக்கு அழைக்க யாரும் முயற்சிக்கலாமெனவும் அவ்வாறு யாராவது உதவினால் அது மகத்தான

(4-ம் பக்கம் பார்க்க)

## சமரசத் தீர்வை அரசு முன்வைக்கவேண்டும்

(கொழும்பு)
வடக்கு - கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சமரச திட்டமொன்றை விரைவாக அரசு முன்வைக்க வேண்டுமென்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயலாளர் நாயகம் திரு சுரேஷ் பிரேமச்சந்திரன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் புதிய பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ரி-சி)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று திங்கட்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

(சி)

## தடுப்பு முகாம் கைதிகளின் உருக்கமான கடிதம்

(லண்டன்)
தென்பகுதியில் தடுப்பு முகாம்களில் வதைபடும் கைதிகளை இலங்கை மக்கள் மறக்கக் கூடாது' என்று தடுப்பு முகாம்களில் உள்ள கைதிகள் பி பி ஸி க்கு எழுதிய கடிதத்தில் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விலங்கு போடப்பட்டு இரகசியமான முறையில் எங்கள் மீது தாக்குதல் நடாத்துகிறார்கள். நாங்கள் வாய் பேசாத நிலையில் தவிக்கி

4-ம் பக்கம் பார்க்க)

# இணுவில் ஸ்ரீபரராசசேகரப் பிள்ளை

## சிறப்பு மலர் (24

## சிந்தூரக் கணபதியைத் துதிக்க வாரீர்

சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியின் மரபின் பதினோராவது தலைமுறையை சேர்ந்த பரராசசேகர மன்னனால் வழிபட்ட இணுவைக் கணபதி, சித்திரத் தேர் ஏறி அருட்கடாச்சம் புரிந்து வருகின்றான்.

**வெண்பா**

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை.

**விருத்தம்**

சுரராசு கீதமலி இணுவையூரில்
சேவனஞ்சேர் சித்திரத்தேர் மிசையமர்ந்தே
பரராச சேகரப் பிள்ளையாரும்
பவனிவரும் அருட்காட்சி காணவாரீர்
வரமீனும் விநாயகனும் வசிகள் நல்கி
வல்வினைகள் நீக்கிடுவான் அடியர் நீவிர்
சிர மேனிக் கரம்குவித்தே பக்தியோடு
சிந்தூரக் கணபதியைத் துதிக்க வாரீர்

கவிமாமணி
பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்

★

## திருவூஞ்சல்

சீர்பூத்த பேரொளியா யுயிர்க்குயிரா யகண்டிதமாய்
இறந்தோர்க்கும் ஞானவடிவாம் நின்மல மூர்த்தியே
பேர்பூத்த குணங்குறிக ளிந்தபழ மறைக்கொழுந்தே
பெருமை சான்ற மன்னனும் பராச சேகரன்
பார்பூத்த புகழான மைந்த பெருங்கோயில்
குடிகொண்ட

பஞ்சமுக விநாயகரே நின்னூஞ்சல் பாடக்
கார்பூத்த இணுவை நகர் களிப்புற கருணைசெய்யும்
கணபதிதன் திருசரணம் கருத்துள் வைப்பாம்

ஸ்ரீமான் கை. ஆ. கதிர்காமநாதன்
(இளைப்பாறிய அதிபர்)

**குறட்பா**

அத்தி முகவனை நித்தம் நினைபவர்
சித்தம் மகிழ்வொடு முத்திபெறுபவரே

இற்றைக்கு 600 ஆண்டுகளுக்குமுன் யாழ்ப்பாண அரசு இருந்த காலத்தில் நல்லூரில் அரசாண்டு இணுவிலில் வாழ்வு தந்த பரராசசேகர மன்னன் வழிபட்ட ஆலயமாக யாழ்ப்பாண வரலாறு கூறுகிறது.

ஒரு காலத்தில் உன்னத நிலையிலிருந்த புண்ணியப் பிரதேசங்கள் சிதைவுற்றும், நிலைகுலைந்தபோதும் மீண்டும் இன்னொரு காலத்தில் அதே நிலையில் அல்லது விஞ்சி நிற்கும் தானத்தை அடைதல் காலநியதியாகவுள்ளது. இதற்கேற்ப அக்காலத்தில் போர்த்துக்கேயரால் தகர்க்கப்பட்ட பாரிய ஆலயங்கள் மீண்டும் முன்னின்ற நிலையை அடைந்திருப்பதை இன்றும் காணலாம்.

ஈழத்தில் உடுவில் கோவில்பற்றை முற்றுகையிட்ட போர்த்துக்கேயர் இணுவில் என்னும் பூர்வீகக் கிராமத்து பரராசசேகரப் பிள்ளையார் கோவிலையும் நிலைகுலையச்செய்துள்ளார்கள். அரச பரம்பரையில் பராமரிக்கப்பட்ட இக்கோவிலைப் பாழாக்க எண்ணி இத்தலத்தை மடம் என்று வாதாடி ஒளவுக்குப் பாதுகாத்தனர். என்று கர்ண பரம்பரை கூறுகிறது. வாயில் பக்கத்தில் மடம் அமைந்திருந்தமையினால் இக்கோயிலைமடத்துவாசல் பிள்ளையார் கோவில் என்று தொடர்ந்து வழங்கலாயினர். "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்பொருள் காண்பதறிவு" தப்பட்ட விநாயக வழிபாடு தமிழகத்தில் பல்லவர் காலத்தில் [கி.பி. 630-668] மறுமலர்ச்சி பெற்றுள்ளது.

எந்த வழிபாடு தமிழகத்தில் முதன்மை பெற்றதோ அதே வழிபாட்டின் மறுமலர்ச்சியை ஈழத்திலும் மிக முக்கியமாக யாழ்ப்பாணத்திலும் அதன் பூர்வீக வரலாறு காட்டு இருக்கிறது. இச்சம்பவத் உற்று நோக்குமிடத்து க... டவையும், அயல் கிராமங்... யும் பார்க்குமிடத்தும் ...ளையார் வழிபாடு பரந்... தது புலனாகிறது. தொட... காலத்தில் அதாவது கி... 1475ல் சிங்கைபரராசசே... அரசனான போது நல்லூ... இராசதானியாகக் கொ...

## ஸ்ரீபரராசசேகரப் பிள்ளையா... கர்ண பரம்பரை வரலாறு

என்ற முதுமொழிக்கேற்ப அதனை ஆராயும் போதும், அதன் தோற்றத்தைக் கால வரையறை செய்து அறிய முற்படுவது இயல்பு. எனினும் சில விஷயங்கள் வரலாற்றுக்கு அப்பாற்பட்டதால் மறைப்பொருளாய் விஞ்ஞானத்தாலும் அதன் கரிய தொடக்கத்தை அறிய முடியாததாகிருக்கிறது. பூர்வீக காலத்தில் மானசீகமாய் பின்னர் மந்திர தந்திரங்களில் குறிப்பொருள்களினாலும் உணர்த்திறது. சமணரவர் காலத்தில் மிக முக்கியமாக ஏழாம் நூற்றாண்டு திருஞானசம்பந்தர் காலத்தில் விநாயகர் வழிபாடு மாறும் காலமாக இருந்தது குலோத்துங்க சோழனது (1109-1118 தளபதியாகிய கருணாகரத் தொண்டமான் இணுவிலில் வைகும் நாளில் வழிபாட்டுக்காக கருணாகரப்பிள்ளையார் கோவிலை கட்டுவித்தான் என்று யாழ்ப்பாண வரலாறு கூறும். இன்று இக்கோயில் உரும்பிராய் எல்லைக்குள் அரசாண்ட அந்தக் காலத்... இணுவில் பிள்ளையாரா... தைப் புதுக்கக்கட்டி வ... தந்து வழிபட்டான் எ...



## தேர்த் திருவிழாவும் அதன் தத்துவமும்

பரராசசேகரப் பிள்ளையார் தேர்த்திருவிழாவானது வைகாசி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தில் கொண்டாடப்படும் உற்சவமாகும். இவ் ஆலயம் 1960ம் ஆண்டு இணுவையூர் வாழ் மக்களாலும் ஏனைய கிராமங்களிலும் ஈழவள நாட்டின் நாலா பக்கங்களிலும் வாழும் இந்துக்களாலும் சிவஸ்ரீ சி. சதாசிவ குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட ஆலயமாகும். அன்று தொடக்கம் இன்றுவரை இரதோற்சவ திருவிழா சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. 1966ம் ஆண்டு விநாயகருக்கு புதிய சித்திரதேரும் 1975ம் ஆண்டு முருகப்பெருமானுக்கு புதிய சித்திரதேரும் 1976ம் ஆண்டு சண்டேசுவரருக்கு புதிய சித்திர தேரும் அமைக்கப்பட்டு மூன்று புதிய சித்திர தேர்களும் இவ்வாலயத்தில் பவனிவருவது கண் கொள்ளா காட்சியாகும்.

தேரின் தத்துவம் எமது வீரத்தோடு தொடர்புடையது தேரின் அமைப்பு எமது சரீரமாகவும் தேரிலுள்ள சிங்கம், யாளி மக்களிடம் காணப்படும் தீயகுணங்களாகவும், இத்தீய குணங்கள் இரதோற்சவ காட்சியினால் அழிக்கப்பட்டு ஆன்மாக்கள் அருள் பெறுதலையும் குறிக்கும்.

ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் பஞ்ச கிருத்தியங்களை செய்கின்றதால் இதிலே அழித்தல் தொழில் மிகவும் முக்கியமானது. இதனாலேதான் 'பொருது மூவெயில் செற்றவன்'' என சிவனை நாணாகவும், விஷ்ணுவை அம்பாகவும் அக்கினியை அம்பின் கூர்மையாகவும் வாயுவை வேகமாகவும் பிரமாவை சாரதியாகவும் கொண்டு தேரினை அமைத்து முப்புரம் எரிசெய இறைவனுக்கு அருளினர் என்பது புராணம்.

இவ் ஆலயத்தில் பஞ்சமுக விநாயகரும், முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராய் சண்டேசுவரரும் சித்திரதேரில் அமர்ந்து உலா

(திருநெறிய தமிழ்மறைக் கழகம்
(இணுவில் பரராசசேகர பிள்ளையார் கோவில்)

ஞானசம்பந்தர் அருளி போத்தார். முப்புரமென்பது மும்மல காரியம் அதாவது ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்களையும் அழித்தல் என்பதாகும். இதனையே தேர்த்திருவிழா குறிக்கின்றது.

தேவர்கள் சூரிய சந்திரர்களை தேர்ச்சில்லாகவும் உலக சராசரங்களை உறுப்புக்களாகவும் வேதங்களை நான்கு குதிரைகளாகவும் மகாமேரு மலையை வில்லாகவும் வாசுகியை நாணாகவும், ... வரும் காட்சிகண்கொள்ளாக் காட்சியாகும். அன்பர்வழி நின்று இறைவன் அருள்செய மங்கள வாத்தியம் முழங்க குடைபூரசட்டி பக்தர்கள்தந்த அங்கபிரதட்சணம் செய்துவரும் அடியார்கள் பின்தொடர பஜனைபாடும் அடித்தொண்டர் தொடர்ந்துவர காவடிகள் ஆடிப்பக்தர் பலர் களித்துவர எம்பெருமான் தேரில் அமர்ந்து அருட்கடாட்சம் புரிந்துவருவார்.

### ஆலய அமைவிடம்

ஈழவள நாட்டி... யாழ்ப்பாணத்தின் க... அமைந்துள்ள கிராமங்... ளில் ஒன்றாகிய இணுவி... கிராமத்தில் வடக்... புகழ்பெற்ற தலங்களி... ஒன்றாகிய இணுவி... கந்தசுவாமிகோவிலை... கிழக்கே சிவகாமி அ... மையையும், ...ரைக்கா... சிவனையும் ...கொண்... ஊரின் கண்ணே தெ... பால் எழுந்தருளியிரு... கும் விநாயகர் ஆலயமா... கும்.

மலர் ...க்கம்!
...விநாயகர்
தண்ணீர்ப்பந்தல்
பரராசசேகரப்
பிள்ளையார்கோவிலடி
இணுவில்.

பெஷ... ஹவு...
கே. கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

அகிலமெலாம் விநாயகனின் அருட்கடாட்சம் வியாபித்து
நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவவும் நாட்டு மக்களிடையே நல்லுறவு மலரவும்
திருத் தேர் ஏறிவரும் விநாயகனை பிரார்த்திக்கின்றோம்.

கணேசன்
ரெக்ஸ்ரைல்
இணுவில்

"நிரு"
கல்வி நிலையம்
புகையிரத வீதி,
கோண்டாவில்.

எவரெஸ்
கல்விநிலையம்
கந்தசாமி கோவிலடி,
இணுவில்.

லிங்கம்
ஸ்ரோர்ஸ்
பரராசசேகரப்
பிள்ளையார் கோவிலடி,
இணுவில்.

சிவன்
ஸ்ரோர்ஸ்
இணுவில் மேற்கு,
இணுவில்.

தேன்சரபி அ...
கெஸ்கோ
கோப்பி அன் கூல்ப...
பாலி வீதி,
திருநெல்வேலிச் சந்...

செல்வக்குமரன்
அரிசி ஆலை
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

ஐங்கரன்
பந்தல் சேவை
இணுவில் மேற்கு,
இணுவில்.

பிள்ளையார்
ஸ்ரோர்ஸ்
No 8, புகையிரத வீதி,
சுன்னாகம்.

லீலா ஸ்ரோர்ஸ்
No 4, கே கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

டயமன்ட்
ரேடர்ஸ்
சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

நாகூர் அன்
பிறதர்ஸ்
No 33, கே.கே.எஸ். வீ...
சுன்னாகம்.

# ...ளையார் கோவில் இரதோற்சவ விழா

## ... (24-05-1993)

...றது. இச்சம்பவத்தை
...நாக்குமிடத்து சற்று
..., அயல் கிராமங்களை
...ர்க்குமிடத்தும் பின்
... வழிபாடு பார்த்திருந்
...ளுகிறது. தொடர்ந்த
...ல் அதாவது கி. பி.
...சிங்கைபரராசசேகரன்
...ன போது நல்லூரை
...தானியாகக் கொண்டு

யாழ்ப்பாண வரலாறு கூறுகிறது.


அதனால் பரராசசேகரப் பிள்ளையார் என நாமம் சூட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. இவற்றைப் பின்வரும் பாடல் உணர்த்துகிறது. இப்பாடல் யாழ்ப்பாண வைபவ மாலையிலிருந்து பெறப்பட்டது.

## ...ளையார் கோவில்

## ...ாறு

...ண்ட அந்தக் காலத்தில்
... பிள்ளையாராலயத்
...புதுக்கக்கட்டி வாழ்வு
...ழிபட்டான் என்று

"மங்கலம் மவளவல
இலங்கபுர வானிடையில்
வைத்த சகியோக
வன்னி யாழ் பாடியே
வாங்கி அரசாண்ட தன்
வளநாட தற்கு வேந்தன்
பொங்குகம காதன்
புவனேக வாகுவாம்
பூசரர்க வோடுவந்த
புண்ணியன் பொன்னிநா
டென்னுமதி பதியாய
புலவர் வணங்குதி
யான்
சிங்கைஆ ரியச்சக் கர
வர்த்தி தன்மரபில்
ஏகாதசம் சிரமுறை
யினன்
திங்கள் நிகர் கவிதையான்
சங்கமிகு பரராசசேகரத்
திகிரிவேந்தனன்
பொங்கும் அருள் தங்கவே
பூசித்த நாயகா
புவி புகழும் மடவாசலில்
புகர் முகக் கடவுள்நின்
மிகு கருணை அடியனேன்
புந்தியில் தங்க அருளே



### ஆலய ...அமைவிடம்

...ழவள நாட்டின்
...ழ்ப்பாணத்தின் கண்
...மைந்துள்ள கிராமங்
... ஒன்றாகிய இணுவில்
...ராமத்தில், வடக்கே
...ம்பெற்ற தலங்களில்
...ருகிய இணுவில்
...தசுவாமி கோவிலையும்
...க்கே சிவகாமி அம்
...மையும், ...ரைக்கால்
...ளையும் ...டிகொண்ட
...ின் கண்ண தென்
... எழுந்தருளியிருக்
... விநா...ர் ஆலயமா
...

மலர் ...க்கம்!
வி...யகர்
தண்...ர்பந்தல்
பர... சேகரப்
...ளை... கோவிலடி,
இ...வில்.

பரராசசேகரப் பிள்ளையார் கோவிலில் மூலமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானது திருவுருவம் தமிழகத்துச் சிற்ப விற்பன்னர்களால் அமைக்கப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்டதென்று கூறுவர். அருட்பொலிவோடு அமைந்த திருமுகத்தைக் கொண்ட இத்திருவுருவம் அருள் பாலித்து நிற்கிறது. அக்காலத்தோடு சார்ப்பக்கிருகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்தியை பக்தியென்னும் உரமும், நீரும் ஊற்றி வழிபட்டு வந்தார்கள். இம்மக்களின் அபரிமிதமான பக்தியில் கட்டுண்ட விநாயகப்பெருமானும் அருள் பாலிக்கலாயினர். இவற்றுடன் பஞ்சமுக விநாயகர் வள்ளி தெய்வயானை சமேதரான சுப்பிரமணியர், நர்த்தனம் புரிந்த நிலையில் நடராஜர் சிவகாமி கஜலட்சுமி, சந்தானகோபாலா, காசியிலிருந்து எடுத்து வரப்பட்ட லிங்கம், விஷ்ணு கணபதி, துர்க்கை, தெட்சணாமூர்த்தி, பிரதோஷ மூர்த்தி, சண்டேஸ்வரர், பைரவர், நவக்கிரகங்கள் போன்ற விக்கிரகங்கள் புதிதாக அமைத்து வைக்கப்பட்டு நித்திய நைமித்திய காமிய கிரியைகள் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## மஹோற்சவச் சிறப்பு

எங்கள் ஆலய வருடாந்த மஹோற்சவம் ருதுக்களிற் சிறந்த வசந்தருதுவில் வைகாசி மாதத்தில் நடைபெறுகிறது மக்களினால் ஒதுக்கித் தவிர்க்கப்பட்ட அட்டமி நவமித் திதிகளிலேயே கொடியேற்றம் பிரதி வருடமும் வருகிறது. இது இறைவனுக்கு உகந்த வேறெங்குமில்லாபி ஒரு நாளாக அமைந்தது ஒரு சிறப்பம்சமாகும். அன்று விநாயகருக்குகந்த விசேட நட்சத்திரமான சதயமும் கூடி நிற்கும். உற்சவ மகாயாகம் ஒன்பது தினங்கள் நடைபெற வேண்டுமென்பதற்காக உற்சவத்தின் இரண்டாம் நாள் மாலையே மகாயாகம் ஆரம்பமாகிறது. இறைவனின் ஐந்தொழில்களைக் குறிக்கும் மஹோற்சவத்தில் படைத்தல் தொழிலைக் குறிக்கும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, காத்தல் தொழிலைக்குறிக்கும் வாகனத் திருவிழா வரிசை கைலாச வாகனத்திற் பவனி வருவதிலிருந்து ஆரம்பமாகிறது. ஆறும் திருவிழா திருமஞ்சத்திருவிழாவும், ஒன்பதாம்நாள் சப்பறத்திருவிழாவவும்வெகு சிறப்பாக நடைபெறும்.

பதிபுண்ணியமாகியஉற்சவத்தைச் செய்யும் உபயகாரர்கள் பசு புண்ணியமாகிய அன்னதானத்தையும் இவ் விழாக் காலங்களிற் தவறாது செய்து வருகிறார்கள். பத்தாவது நாள் இரதோற்சவம் அழித்தல் தொழிலைக் காட்டும் இவ்வுற்சவம் அழித்தல் தொழிலைச் செய்யும் உருத்திரனின் நட்சத்திரமாகிய திருவாதிரை நட்சத்திரத்திலே வருவது இங்கு ஓர் சிறப்பம்சமாகும். காலையில் பஞ்சமுக விநாயகர், சுப்பிரமணியர், சண்டேசுவரர் ஆகிய தெய்வமூர்த்தங்கள் தத்தமக்குரிய மூன்று சித்திரத் தேர்களிலும் ஆரோகணித்து வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். மாலையில் எமது வினைகளெல்லாம் வேரறுக்க வெளிவந்த மூர்த்திகள் மாலையில் சாந்தமாகக், குளிர்ச்சியாக ஆலயத்தில் எழுந்தருள்வர். வசந்த மண்டபத்தில் வேதபாராயணத்தோடு கூடிய ராஜரபிஷேகம் நடைபெறும் பதினோராம் நாள் தீர்த்தோற்சவம் ஆகமங்களிற் கூறப்பட்டபண்ணம் (அதாவது கிணற்றிலே எடுக்கப்படும் தீர்த்தம் மாலையிலேயே செய்ய வேண்டும். மாலை ஐந்து மணிக்கு நடைபெறுகிறது. அஸ்திர நாயகருக்கு அபிஷேகம் கிரமமாக நடைபெறும். முதற்கடவுளாம் விநாயகரும், இளையவராகிய முருகனும், காத்தற் தெய்வமாம் கண்ணனும், வாரிவழங்குபவளான இலக்குமியும், சண்டேஸ்வரரும் தீர்த்த மண்டபத்தே எழுந்தருளி வீற்றிருக்க மக்கள் இசை அமுதத்தினையும் தீர்த்தாமிர்தத்தினையும் பருகுவர். மஹோற்சவ காலங்களில் பகலும் இரவும் சுவாமி இரு வீதிகளிலும் வருவது தேரோடும் வீதியிலேயே பலிபோடுவதும் சிறப்பானதாகும்.

ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீ
வை. சோமாஸ்கந்தக்
குருக்கள்

## கம்பன் கழக ஆசிச் செய்தி

தமிழும், சைவமும், தமிழ்க்கலைகளும் செழித்து வளரும் இணுவையம்பதியில் வாழ்வு மிகுத்து வர வளந்தரும் வேழமுகத்தான் வீற்றிருந்து அருள்செய்யும். பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயம் அருட்பொலிவும், கலைப்பொலிவும் ஒருசேர நிமிர்ந்து நிற்கும் ஓர் க்ஷேத்திரம்.

தேர்த்திருவிழா அழித்தல் தொழிலின் தத்துவமாகும். நம் அகத்திருக்கும் தீமைகளையும், புறத்தே நமைச் சூழ்ந்துள்ள தீமைகளையும் ஒருங்குசேர அழிப்பதற்காய் நற்குஞ்சரக்கன்று தேரேறி வலம்வரப்போகிறது. தேர்த் திருவிழா சமய தத்துவங்களை மட்டுமன்றி, சமூக ஒற்றுமையையும் குறியீடாக உணர்த்தி நிற்கும் ஒன்றாகும் "ஊர்கூடித் தேர் இழுத்தல்" என்ற பழமொழி இதனையே உணர்த்தி நிற்கிறது.

இத்திரத்தேரில் எம்பெருமான் ஏற நம்மையும், நம் மினத்தையும் பீடித்து நிற்கும் துன்பமெல்லாம் தீங்கும் நல் வாழ்வும், வளமும் பெறுவோம்.

— இ. ஜெயராஜ்
(அகில இலங்கைக் கம்பன் கழகம்)

## நல்லை ஆதீனம் நல்லாசி

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் தேவஸ்தான ரதோற்சவம் நிகழவிருப்பதறிந்து பேருவகை எய்துகிறோம். விழாக்களில் அதிஉயர் ஸ்தானம் வகிப்பது இப்பெருவிழா. நிலையிலா மானுட வாழ்க்கையைத் தேர்ந்து கொள் என்பது தேர். அன்று எழுந்தருளியின் திருமுகப் பொலிவையும், தேஜஸ்சையும் உற்றுணர்வார் அறிவர். ஆலயத்துட் சென்று வழிபட இயலாதோர்க்கு கிடைக்கும் அரிய வாய்ப்பு. முன்னைத் தவமுடையார்க்கே இது கைகூடும். புராதன வரலாற்றுப் பெருமை மிக்கது இணுவையம்பதி. முத்தமிழ் வித்தகர்கள் பாரம்பரியமாக வாழ்ந்தும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் திருப்பதி அருளாளர்கள் அருளிய திருமுறைப்பாசுரங்களை நவிலுறுது ஓதச் செய்து பெரியோர்களையும இளைஞர்களையும், சிறார்களையும் ஊக்கும் அரும் பணியை இங்குண்டோம்

அவர்களிடையே தெய்வ நம்பிக்கை, தெய்வ உணர்வு தளரா முயற்சி ஆதியன வளர்வது கண்கூடு நாம் பகர்வது ஒன்றும் மிகையல்ல. விநாயகப் பெருமான் பாத கமலர்களைத் தியானித்து எல்லோருக்கும் எமது நல்லாசி களை வழங்குகின்றோம் என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ
குருமஹா சந்நிதானம்

## தேர்த்திருவிழா தரிசனம் எமக்கெல்லாம் விமோசனம்

இணுவில் கிராமம் சைவ எழுச்சி மிக்க சிறந்த கிராமமாகும். மூதறிஞர்கள், சாதுக்கள், கலைஞர்கள், வள்ளல்கள், சிவனடியார்கள் எல்லோரால் பெருமை பெறும் பதி இணுவிலாகும். இத்தகைய பெருமைகளுக்கெல்லாம் ஒளியூட்டி தெய்வீகத்தை அளிப்பன இங்கு அமைந்துள்ள ஆலயங்களேயன்றி அதில் மிகையொன்றுமில்லை. இவ்வூரில் அம்பிகைக்கும் விநாயகனுக்கும் கந்தனுக்கும் அமைந்த திருக்கோயில்கள் யாழ்ப்பாண வரலாற்றிலேயே சிறப்பிடம் பெறுபவை. இவ்வூர் மக்களின் திருந்தி வழிபாட்டுக்கும் பேரபிமானத்துக்கு உரியவை. நித்திய நைமித்தியங்கள் கண்ணியமாகப் பேணப்படுபவை. வம் காண இணுவில் வாழ் மக்கள் எங்கிருந்தாலும் ஓஜோடி வருவர். காவடியும் கற்பூரச்சட்டியும் பிரட்டையும் அடியளித்தலும் கூட்டுவழிபாடும் இந்நாளில் வானைமுட்டி அரோகரா ஒலியை எடுப்பும் காட்சி அற்புதமானது.

இறையன்பும் வழிபாடும் பெருகி வளரும் போதுதான் சமுதாயம் உயர்வடைகிறது. பக்தியும் பண்பாடும் மக்கள் மத்தியில் நிலவவேண்டுமானால் ஆலயங்களே இன்றியமையாது வேண்டப்படுகிறது. ஆலயங்களின் மூலம் ஜீவகாருண்யம், மனிதாபிமானம், கலையுணர்வு ஆகியன பரப்பப்படுவதற்கு தேர்விழா போன்ற பெருவிழா நாட்களில் அன்னதானம்,

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

(தலைவர் துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

இணுவிலென்றும் பரராசசேகரப்பிள்ளையார் நாமம் இணைந்து செவியுலும் சிந்தையிலும் ஒலித்துக் கொண்டிருக்கும். இங்குள்ள மணியோசை திக்கெல்லாம் ஓங்கார நாதத்தைப்பரப்பி அஞ்ஞான இருளை அகற்றிநிற்கும் இத்தகைய அருள் மணம் இடையறாது வீசிக்கொண்டிருக்கும் இத் திருக்கோயில் மஹோற்சவம் நடைபெறுங்காலம் மிக மிக மகத்துவமானது. மகோற்சவத்தில் உயர்ந்த ரதோற்சவத்தில் தண்ணீர்ப்பந்தல், கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுவது அவசியமாகும் இணுவில்வாழ் சைவப் பெருமக்கள் இதனை நிறைவேற்றி வருவது மிகவும் பாராட்டுக்குரியது.

எனவே இணுவில் பரராசசேகரப் பிள்ளையாரின் அழகு மிகு திருக்கோலத்தைச் சித்திரத் தேர் ஏறி திருவுலாவரும் இந்நாளில் தரிசித்து அனைவரும் ஆனந்தமும் அமைதியும் அடைவோமாக.


திருத்தேர் ஏறிவரும் இணுவை பரராசசேகரப் பிள்ளையார் அருளால் நாடு செழித்து நாட்டு மக்கள் வளமுடன் வாழ பிரார்த்திக்கின்றோம்

...ஷ... ஹவுஸ்
...கே. ...எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

நியூ லிங்கம் ஸ்ரோர்ஸ்
சந்தை உப்புறம்,
திருநெல்வேலி.

பரமேஸ்வரன் ஸ்ரோர்ஸ்
இணுவில் மேற்கு,
இணுவில்.

கணேசன் ரேடிங் கம்பனி
கே. கே. எஸ். வீதி,
இணுவில் சந்தி.

மல்ரி ஓயில் லிமிட்டெட்,
கே. கே. எஸ். வீதி,
இணுவில்
ஆஸ்பத்திரியடி.

அண்ணா கோப்பி
இணுவில்.

...தன்சரபி அன் வெஸ்கோ
காப்பி அன் கூல்பார்
பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி.

...நாதன் அன் பி...தர்ஸ்
...33, ...கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

அருள் கல்வி நிலையம்
(A. T. C)
இணுவில்.

சாந்தி
பிடவை மாளிகை
157, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சண்யோ கோப்பி அன் கூல்பார்
பஸ்நிலையம், சுன்னாகம்,

லிங்கம் ஸ்ரோர்ஸ்
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

ஆனந்தகி
No 31 A, மத்தியசந்தை,
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

# புலிகளுடன் பேசுமாறு நான் கூறவில்லை
# 'ஜெ' கூற்றுக்கு சவான் கண்டனம்

(புதுடில்லி)

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துமாறு தாம் கேட்டுக் கொண்டதாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா வெளியிட்ட கருத்தை இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி சவான் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

புதுடில்லியில் பத்திரிகையாளர் மத்தியில் நேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழக முதல்வரிடம் தாம் எந்தக் கட்டத்திலும் இந்த யோசனையை தெரிவிக்கவில்லையென்றும் இக்கூற்று முற்றிலும் ஆதாரமற்றது என்றார்.

முதல்வர் ஜெயலலிதா விடுதலைப் புலிகள் விவகாரத்தில் தாம் மேற்கொண்டுள்ள தற்போதைய நிலையை மறைப்பதற்காகவே இப்படியான ஆதாரமற்ற அப்பட்டமான பொய்யான தகவல்களை தெரிவித்திருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

மத்திய அரசை இக்கட்டானதொரு நிலைக்குத் தள்ளும் முயற்சியாகவே செல்வி ஜெயலலிதா இவ்வாறு பொய்யான தகவலை வெளியிட்டு வருவதாக புதுடில்லி வட்டாரங்களும் கூறியுள்ளன. (க-சி)

---

மாற்றத்தின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லால் ஓராவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஹரியான ஆளுநர் திரு. தனிக்லால் மண்டல் மேலதிகமாக ராஜஸ்தான் ஆளுநராக கடமையாற்றுவார்.

தமிழக ஆளுநரை மாற்ற மேற்கொண்ட முயற்சி தமிழக அரசைக் கலைக்கும் ஒரு முன்னோடி நடவடிக்கையாக இருக்கலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

---

# தமிழக அரசைக் கவிழ்க்க மத்திய அரசு சதி செய்கிறது

(சென்னை)

இந்திரா காங்கிரஸ் கட்சியும், மத்திய உளவு நிறுவனங்களும் தமது ஆட்சியைக் கவிழ்ப்பதற்குச் சதி செய்து வருவதாகத் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழக அரசுக்கு எதிராகப் பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது என்றும், அத்தகைய நடவடிக்கைக்கு ஆதரவான சூழ்நிலையை உருவாக்கும் முயற்சியில் அது ஈடுபட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான், புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தமிழக அரசு ஊசலாட்டத்தில் உள்ளது என்று தெரிவித்த கருத்தை செல்வி ஜெயலலிதா வன்மையாகக் கண்டித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 9ம் திகதி மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் சென்னையில் தம்மைச் சந்தித்தபோது, புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தக்கூடிய சாத்தியக் கூறுகள் பற்றிக் குறிப்பிட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

ராஜீவ் காந்தி கொலைக்குக் காரணமாயிருந்து தடை செய்யப்பட்ட இயக்கமான புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது எவ்வாறு சாத்தியம் என்று அதிர்ச்சியுடன் தாம் திரு.சவானிடம் கேட்டதாகவும் அவர் கூறினார்.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஊசலாடுவது தாம் அல்ல, உள்துறை அமைச்சர் சவான்தான் என்று குற்றம் சாட்டியுள்ள செல்வி ஜெயலலிதா, இது சம்பந்தமாகச் சில சம்பவங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய புலனாய்வுத்துறையைச் சேர்ந்த தலைமைக் காவலர் ஒருவர் சாலிஸ் நவாஸ் தப்பிய முகாமில் பணியில் இருந்ததாகவும், சாலிஸ் தப்பியதில் இவருக்கும் பங்கு இருந்திருக்கலாம் எனவும், இதில் மத்திய உளவு நிறுவனமும் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனவும் தாம் சந்தேகிப்பதாகவும் அவர் கூறினார்.

கற்பனைக் காரணங்களைக் காட்டித் தமது அரசைக் கலைக்கவோ அல்லது தமிழக சட்டப் பேரவையின் செயற்பாட்டைத் தற்காலிகமாக நிறுத்தவோ சதித் திட்டம் உருவாக்கப்பட்டு இருப்பதாகவே தாம் கருதுவதாகச் செல்வி ஜெயலலிதா மேலும் தெரிவித்தார். (நி-இ)

---

# பிற்போடப்பட்ட பரீட்சைகள் அடுத்த வாரம் நடைபெறும்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்ட பரீட்சைகள் அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்தமாதம் 7ம், 8ம் திகதிகளில் ஆசிரியர் பயிலுநர்களுக்காக நடாத்தப்படவிருந்த முதலாவது பரீட்சை எதிர் வரும் வெள்ளிக்கிழமை 28ம் திகதியும், சனிக்கிழமை 29ம் திகதியும் நடைபெறவுள்ளன.

வடக்கு-கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் உள்ள 14 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறவுள்ளது.

இதேவேளையில் தேசியகல்வி நிறுவனம் நடாத்தும் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சான்றிதழ் பரீட்சை 29ம் திகதி சனிக்கிழமையும், 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது. (க-இ)

---

புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செயலாகும் எனவும் கூறியிருந்தார்.

இதனையடுத்து பாரிஸிலிருந்து புலிகளின் பேச்சாளர் திரு. திலகர் கடந்த ஞாயிறு நிபந்தனையற்ற சமாதான பேச்சுக்கு புலிகளும் தயாராயிருப்பதாக அறிவித்திருந்தார்.

எனினும் புலிகளின் இந்த முயற்சிக்கு இதுவரை அரசு தரப்பிலிருந்து எந்தவித பதிலும் கிடைக்காததுடன் அரசு தொடர்ந்தும் மௌனம் சாதித்துவருகிறது. (இ)

---

## அடையாளம் காணாத சடலம்

(யாழ்ப்பாணம்)

கடந்த முதலாம் திகதி ஜனாதிபதி பிரேமதாசா கொலையுண்ட நேரத்தில் மரணமான இன்னொருவரின் சடலம் இதுவரை அடையாளம் காணமல் இருக்கின்றது என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இச்சடலத்தின் புகைப்படம் நேற்று ரூபவாஹினியில் காட்டப்பட்டது. (சு-இ)

---

# ரெலோ தீவிரவாதி தப்பி ஓட்டம்

(சென்னை)

திருச்செந்தூர் சிறைச்சாலையில் இருந்து ரெலோ இயக்க உறுப்பினர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு தப்பியோடி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச்சிறைச்சாலையிலுள்ள சிறப்பு அகதிகள் முகாமில் தமிழ் தீவிரவாதிகளும் அவர்களது ஆதரவாளர்களும் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

ரெலோவைச் சேர்ந்த விஜயகுமார் என்ற தீவிரவாதி நேற்று முன்தினம் நள்ளிரவு சிறைச்சாலையிலிருந்து தப்பியதாக தெரிவிக்கப்பட்டது.

தங்களைப் பொது முகாமிற்கு மாற்றவேண்டுமென்று கோரி பதினொரு அகதிகள் நேற்று முன்தினம் உண்ணாவிரதம் இருந்ததாகவும் இதில் மூவர் அதிகாரிகள் தலையீட்டின் பேரில் உண்ணாவிரதத்தை விலக்கிக்கொண்டதாகவும் அந்தச் சமயத்தில் விஜயகுமார் என்ற ரெலோ உறுப்பினர் சிறையிலிருந்து தப்பியதாகவும், காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். (நி-இ)

---

தமிழர் வாக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குகள் இருக்கின்றன. மாத்தளை மாவட்டத்தில் 35,000 தமிழர்களின் வாக்குகள் இருக்கின்றன. இது இவரது தோல்விக்கு காரணமாகும்.

எதிர்காலத்தில் தமிழ் மக்களின் இந்தவாக்குகள் எமக்கு கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்பதே எம் முன்னுள்ள பிரச்சினையாகும்" என்றார். (சு - இ)

---

மாகாண சபை விவகாரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

க்கியிருப்பதனால் அடுத்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயவே இக்கூட்டம் கூட்டப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இக்கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதில் மேற்கொள்ளும் முடிவுகளின்படி தொடர்ந்து இக்கூட்டணி செயற்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-சி)

---

சேபால ஆட்டிகல

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1942ம் ஆண்டு 2ம் உலக மகாயுத்தம் நடைபெற்ற வேளையில் இலங்கை காலாட் படையின் 2ம் லெப்டினண்டாக இராணுவத்தில் சேர்ந்த இவர் இறுதியில் இராணுவ தளபதியாக பதவி வகித்து ஓய்வு பெற்றார்.

பின்னர் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராகவும் பாதுகாப்பு செயலாளராகவும் கடமையாற்றினார்.

நீண்டகாலம் லண்டனில் இலங்கைக்கான உயர் ஸ்தானிகராகவும் இவர் கடமையாற்றினார்.

ஜெனரல் சேபால ஆட்டிகல கடந்த வாரம் ஏயார் லங்கா பணிப்பாளர் சபைத் தலைவராக நியமிக்கப்பட்டதும் தெரிந்ததே. (க-இ)

---

தமிழக அரசை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; உத்தரப்பிரதேசத்தில் பாரதீய ஜனதாக்கட்சி தலைமையிலான அரசை மத்திய அரசு நீக்கியபோது அங்கிருந்த நிலையைப் போலவே தமிழகத்தின் தற்போதைய நிலை காணப்படுகிறது.

மேலும் அரசியல் அமைப்புச்சட்டத்தில் 356வது பிரிவை பயன்படுத்தி மாநில அரசுகளை மத்திய அரசு கலைப்பதை தி. மு. க. கழகம் எப்போதும் எதிர்த்து வந்திருப்பதாகவும் ஆனால் உத்தரப் பிரதேச அரசை கலைத்த போது தி. மு. க. கண்டனம் எதுவும் தெரிவிக்கவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் இதுவரையில் 65 இலங்கை தமிழ் போராளிகள் சிறைகளிலிருந்து தப்பிச் சென்றிருப்பதாக முதல்வர் ஜெயலலிதா அண்மையில் தெரிவித்தமையை சுட்டிக் காட்டிய அவர் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் மாநிலத்தில் இருப்பதாலேயே அவர்கள் தப்பியோட முடிந்தது என்றார்.

இதற்கிடையில் தமிழகத்தில் விடுதலைப் புலிகள் விவகாரம் தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி சவான் அண்மையில் தெரிவித்த கருத்துக்கு தமிழக முதல்வர் தெரிவித்த விளக்கமானது அவர் நிலை குலைந்து நிதானமிழந்து விட்டார் என்பதைக் காட்டுவதோடு அவரது அரசியல் முதிர்ச்சியின்மையை காட்டுவதாக தமிழக காங்கிரஸ கமிட்டி செய்தி தொடர்பாளர் பி.வி.பொன்னிவளவன் கருத்து தெரிவித்துள்ளார்.

மேலும் தனது அரசு பதவி நீக்கம் செய்யப்படும் அபாயம் எதுவும் இல்லையெனக் கூறிய முதல்வர் மறுநாளே தமது ஆட்சியை கவிழ்க்க மத்திய அரசு திட்டமிடுகிறது என்று கூறியிருப்பது அவரது ஆத்திரத்தையும் கோபஉணர்ச்சியையுமே காட்டுவதாக உள்ளது என்றும் குறிப்பிட்டார். (க - இ)

---

மாகாண சபைகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு அவை மேற்கொண்டுவரும் கடமைகள் அனைத்தும் தொடர வேண்டும். மாகாணங்களின் செயற்பாடுகளிலோ கடமைகளிலோ மத்திய அரசாங்க அமைச்சர்களோ அதிகாரிகளோ தலையீடு செய்து இடையூறாக இருப்பதை தாம்விரும்பவில்லையென்றும் ஜனாதிபதி விஜயதுங்க வலியுறுத்தியுள்ளார். (நி-இ)

---

பிரேமா கொலை:

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தவர்கள் தற்போது கொழும்பில் வசித்து வருகிறார்கள்.

இதேவேளை திரு. பிரேமதாஸாவின் கொலை தொடர்பாக இரகசியப் பொலிஸார் ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த ஐந்து விஷேட குழுக்களுக்கும் பொறுப்பாக இரகசிய பிரிவின் பணிப்பாளர் நாயகம் புஞ்சி பண்டா செனிவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். (நி-சி)

---

தடுப்பு முகாம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரேம்.

அண்மையில் எங்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தை நசுக்கும் பொருட்டு சிறை அதிகாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு கைதியின் கால் பலத்த சேதமாகி பின்பு காலின் ஒரு பகுதி அகற்றப்பட்டது.

பலவந்த தடை முகாமில் கைதி ஒருவர் கொலை செய்தார் என்று பொய்க்குற்றம் சுமத்தி தென் மாகாணப் பொலிஸ் நிலையத்தில் பலாத்காரமாக கையெழுத்து வாங்கப்பட்டுள்ளது.

எங்களுக்கு உணவு தரும் சிறை அதிகாரிகளும் எங்கள் மேல் ஒருபோதும் அனுதாபம் காட்டுவதில்லை. (க-இ)

---

## மரண அறிவித்தல்

### இராசேந்திரம் (சவிரிமுத்து)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், கருகம்பனை பம்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட இராசேந்திரம் (சவிரிமுத்து) காலமானார். இவர் காலஞ்சென்ற பாக்கியநாதர் அன்னம்மா தம்பதிகளின் மகனும், ஆனந்தராஜா, குமரா, பாக்கியராசா, யோகராசா ஆகியோரின் தந்தையும், யேசப் (பண்டிவிரிச்சான்), செல்வம், சவிரிமுத்து (சாம்பல்தீவு), விமலா, லலிதா, கிறிஸ்ரோசன், நீக்கிலாஸ், திரேசம்மா ஆகியோரின் சகோதரரும், விக்டோரியா, சரசு, நீக்கிலாஸ், தேவதாஸ், மேரி அஞ்சலா (மலேசியா), பிலிப்பு ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரது பூதவுடல் ஓமந்தையிலுள்ள மருதங்குளத்தில் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தமிழ்ச்செல்வன்

68/18, அராலி றோட்,
(செழியன் வீதி)
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

(சி -141)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் சொந்தக்காரரால், யாழ்ப்பாணம் [illegible] வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Colombo under licence Number .B/10836/B